பக்கங்கள் 18+6

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 01 செவ்வாய்க்கிழமை 17.09.2024 | அதிர்வு 47

## செப். 22 இல் ஜனாதிபதியாக ரணில் மீண்டும் பதவியேற்பு!

### வேலுகுமார் எம்.பி. ஆரூடம்



வரும் 22 ஆம் திகதி எமது நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பது உறுதி என்று நாடாளுமன்ற உறுப்பினர் 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### நிற பேதங்கள், கட்சி பேதங்கள் இன்றி

# மனித நேயத்தின் நாமத்தினால் அனைவரையும் பாதுகாப்போம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சிகள் அத்தோடு கட்சிகளைச் சாராத குழுக்களில் உள்ளவர்கள் என அனைவரையும் நாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு மனிதநேயத்தின் நாமத்தினால் பாதுகாப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 65 ஆவது வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஹெட்டிபொல நகரில் முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார். 02▶



CLICK HERE VIDEO

# தம்பியைச் சுட்டுக்கொலை செய்த அண்ணன்

### சம்மாந்துறையில் நேற்று இரவு கொடூரம்





(பாறுக் ஷிஹான்)

வீடொன்றில் இளம் குடும்பஸ்தர் மரணமடைந்த சம்பவம் ஒன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் 04▶



# மனித நேயத்தின் நாமத்தினால் அனைவரையும் பாதுகாப்போம்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்,

“வறுமையை ஒழிக்கும் முகமாக அனைத்து வரிய குடும்பங்களுக்கும் 24 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் முதலீடு, உற்பத்தி, நுகர்வு, சேமிப்பு மற்றும் ஏற்றுமதி ஆகிய பிரிவுகளுக்குள்ளடக்கி நிவாரணங்களை வழங்குவோம். எவரும் தொடர்ந்தும் வறியவர்களாக இருப்பதற்கு விருப்பமில்லாதமயால் நாம் வறுமையே ஒழிப்போம்.

தமக்கென்று வீடும் காணியுமில்லாதவர்களுக்கு வீட்டையும் காணிக்கான உரிமையும் பெற்றுக் கொடுப்போம்.

50 கிலோ கிராம் உள்ள உர மூடை ஒன்றை 5000 ரூபாவுக்கு ஐக்கிய மக்கள் சக்தி வழங்கும். பெரிய வெங்காய உற்பத்தியாளர்களையும் பாதுகாப்போம். பெரிய வெங்காயம், சோளம், உருளைக்கிழங்கு என்பன அறுவடை செய்யப்படுகின்ற போது ரணில் விக்கிரமசிங்க அவற்றை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றார். விவசாயிகள் மற்றும் நுகர்வோர்கள் ஆகிய இரு தரப்பினரையும் பாதுகாக்கின்ற நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தி அதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும்.

விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரம் வழங்குகின்ற அதே வேளை விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், ஓட்டோ உரிமையாளர்களுக்கும், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து பஸ் உரிமையாளர்களுக்கும், சக்தி அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருளை வழங்குவோம். இந்த எரிபொருள் நிவாரணம் செல்வந்தர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. எரிபொருள் நிவாரணத்தை தொழிலாளர் வர்க்கத்திற்கே வழங்குவோம். செல்வந்தர்களுக்கும் கோடீஸ்வரர்களுக்கும் எரிபொருள் நிவாரணம் வழங்க வேண்டிய தேவை இல்லை.

இந்த நாட்டில் உள்ள 25 நிர்வாக மாவட்டங்களை மையப்படுத்தி ஜனாதிபதி அபிவிருத்தி செயலணி ஒன்றை உருவாக்குவோம். அதன் ஊடாக அனைத்து நிர்வாக மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நேரடியாக கண்காணிப்போம். அத்தோடு ஜனாதிபதியை மக்கள் தொடர்பு கொள்வதற்கு தனியான அலகொன்றையும் நிறுவுவோம். மக்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முறையான தொடர்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு கிராமங்களையும் நகரங்களையும் அபிவிருத்தியடையச் செய்யும் கம் உதாவ நகர உதாவ வேலை திட்டங்களை மேற்கொள்வோம்.” – என்றார்.













# கஷ்டப்பட்டு பெற்ற வெற்றியைப் பாதுகாக்க எரிவாயு சிலிண்டருக்கு வாக்களியுங்கள்!

## சஜித்துக்கும் அநுரவுக்கும் பொய்யான வாக்குறுதிகளைத் தவிர திட்டம் எதுவும் கிடையாது என்று ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு






கஷ்டப்பட்டு அடைந்த வெற்றியைப் பாதுகாக்கும் வகையில் எதிர்வரும் செப்டெம்பர் 21ஆம் திகதி எரிவாயு சிலிண்டருக்காக வாக்களிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களிடம் கோரியுள்ளார்.

அரசு ஏற்கனவே அமுல்படுத்திய வேலைத்திட்டத்திற்கே சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இருக்கின்றது என்று தெரிவித்த ஜனாதிபதி, மக்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளை வழங்கும் சஜித்துக்கோ அல்லது அநுராவுக்கோ நாட்டை முன்னேற்றுவதற்கான வேலைத்திட்டம் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

வெல்லவாயயில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பேரணியில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர்.

இதில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

"இந்த நாட்டின் இளைஞர்களுக்கு 4 வருடங்களாக வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை. அடுத்த ஆண்டு அரச மற்றும் தனியார் துறையில் ஒரு இலட்சம் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம். மேலும் 50 ஆயிரம் பேருக்கு அவர்கள் விருப்பமான தொழில் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற நிதி உதவி வழங்கப்படும்.

இதற்கு தொங்குபாலத்தில் பயணத்தைமுடிக்கவேண்டும். நாம் இன்னும் சிறிது தூரம் செல்ல வேண்டும். தொங்கு பாலம் கொஞ்சம் ஆடுகின்றது. செப்டெம்பர் 21 ஆம் திகதி மக்கள் தங்கள் கடமையை நிறைவேற்றினால் இந்தத் தொங்கு பாலத்தின் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ய முடியும்.

இன்று தொங்கு பாலத்தைக் கடக்கும் குழந்தையின் உரிமையை எடுக்க இரண்டு பேர் தயாராகின்றார்கள். இருவரிடம் எந்தத் திட்டமும் கிடையாது. எனவே, நாட்டின் எதிர்காலத்தை அவர்களிடம் ஒப்படைக்க முடியாது. நாம் முன்னேற வேண்டுமானால், ஐ.எம்.எப். ஆதரவுடன் முன்னேற வேண்டும். அரசு இதுவரை செயற்படுத்தி வரும் திட்டத்திற்குத்தான் அதன் ஆதரவு உள்ளது.

முன்னாள் விவசாய அமைச்சர் அநுரகுமார என்னை விவாதத்திற்கு அழைத்தார். நான் அதற்குத் தயார் என்று அறிவித்துள்ளேன். ஆனால், இன்னும் அழைப்பு வரவில்லை. இன்றும் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். அவர்களால் ஏன் விவாதத்திற்கு வர முடியாது? அவர்களிடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதாலே பின்வாங்குகின்றனர். அனைத்தையும் இலவசமாகக் கொடுப்பது பற்றித்தான் சஜித் பேசுகின்றார். தலை வலியையும் அவர் இலவசமாகக் கொடுப்பார். ஆனால், நாம் கடினமாகப் பெற்ற வெற்றியைப் பாதுகாத்து முன்னேற வேண்டும். இதற்காகச் செப்டெம்பர் 21ஆம் திகதி காஸ் சிலிண்டருக்காக அனைவரும் வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்." - என்றார்.









# மலையக மக்களின் ஆதரவு ரணிலுக்கே!

## பதுளை பிரசாரத்தில் வடிவேல் சுரேஷ் தெரிவிப்பு

மலையக மக்களின் முழுமையான ஆதரவு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கே கிடைக்கப்பெறும் என்று இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளையில் நேற்று திங்கட் கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணி லால் இயலும்" பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இந்த மக்கள் கூட்டத்தைப் பார்க்கும்போது ரணில் விக்கிரமசிங்க இம்முறை பதுளை மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்பது உறுதியாகின்றது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஜனாதிபதிக்கு ஆதர வளிக்க முன்வந்துள்ளனர். இந் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எமது கடமையை நிறைவேற்றி தோட்டத் தொழிலாளர் களின் 100 வீதம் வாக்குகளை வழங்கு வதற்கு நாம் தயாராக இருக்கின் றோம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**செப். 22இல்...**

எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

கம்பளையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

" மலையகப் பெருந்தோட்ட மக்கள் கடந்த காலங்களில் ஓரங்கப்பட்டும் நிலை இருந்தது. குறிப்பாக நிவாரணக் கொடுப்பனவுகளின்போது, ஏதோவொரு காரணம் காட்டி தோட்ட மக்கள் தட்டி கழிக்கப்படுகின்றனர். ஆனால், ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க அஸ் வசும கொடுப்பனவை மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கும் விரிவு படுத்தி வழங்க ஒப்புதல் அளித்துள் ளார்.

2015 ஆம் ஆண்டு முதல் ரணில் விக்கிரமசிங்க, பிரதமராக இருந்த அரசி லேயே மலையக மக்களுக்கு அதிக பட்சமான வேலைகள் நடைபெற்றன.

தனி வீட்டுத் திட்டத்துடனான புதிய கிராமங்கள், நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகளின் அதிகரிப்பு மற்றும் பிரதேச செயலகங்கள் அதிகரிப்பு என பல விடயங்களைக் கூறிக்கொண்டு போக முடியும். எதிர்வரும் 22 ஆம் திகதி எமது நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பது உறுதி.

அதன் பின்னர் அன்று நாம் நிறுத்திய வேலைத்திட்டங்களை மீண்டும் ஆரம்பித்து முன்கொண்டு செல்ல முடியும். எனவே, நாட்டுக்கும் நமக்கும் வெற்றி கிட்டும் வழி ரணிலின் வழியே ஆகும்." – என்றார்.

---

**தம்பியை...**


பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சகோத ரர்களுக்கிடையில் ஏற்பட்ட துப்பாக் கிப் பிரயோகத்தில் 28 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான பக்கீர் முகைதீன் றோஜான் என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இரவு 10.45 மணியளவில் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

ரிப்பிட்டர் ரக துப்பாக்கியே படு கொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று ஆரம்பகட்ட விசாரணையில் இருந்து தெரியவந்தள்ளது.

சம்பவம் தொடர்பில் தம்பி மீது துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட வர் எனக் கூறப்படும் சந்தேகநபரான சகோதரரைச் சம்மாந்துறைப் பொலி ஸார் கைது செய்து மேலதிக விசார ணைகளை முன்னெடுத்து வருகின்ற னர்.

சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோ தனைக்காக்க வைக்கப்பட்டுள்ளது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஹேரத்தின் கணக்கு

இந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கா வெற்றி பெற்றதும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் 4 பேர் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்படும் என கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

அத்துடன், செப்டெம்பர் 21 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் மினுவாங்கொடையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்பட்டது.

அநுரகுமார திஸநாயக்கா ஜனாதிபதியான பின்னர் கொழும்பு மாவட்டத்தில் விருப்பு வாக்கு பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ள லக்ஷ்மன் நிபுணாராய்ச்சி புதிய நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவுள்ளார் என்றும் -

அரசமைப்பின் 47.3 சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுடன் புதிய அமைச்சரவையொன்று நியமிக்கப்படும் என்றும் - அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் 4 பேர் கொண்ட அமைச்சரவையை நியமிக்கலாம், ஒரு புதிய பிரதமர் நியமிக்கப்படுவார், அது ஒரு பெண்ணாக இருக்கலாம் என்றெல்லாம் கூட அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

சுவிட்சர்லாந்தில் ஏழு பேர் கொண்ட அமைச்சரவை மட்டுமே இருப்பதாக சுட்டிக்காட்டிய விஜித ஹேரத், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் வரை நான்கு பேர் கொண்ட அமைச்சரவை இரண்டு மாதங்களுக்கு இயங்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அரசமைப்புப் பற்றிய சரியான புரிதல் இன்றியே விஜித ஹேரத் இப்படி பேசுகின்றார் என்றே தோன்றுகின்றது.

செப்டம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் தினமாகும். அன்று நாடாளுமன்றத்தைக் கலைப்பதாயின் அதை தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதியால் தான் செய்ய முடியும். தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமாரவினால் அன்றைய தினத்தில் அதைச் செய்ய முடியாது.

அடுத்த நாள் தேர்தல் முடிவு வரும் போது அநுரகுமாரவே வெற்றி பெற்றாலும் புதிய ஜனாதிபதியாக உடனடியாக பதவியேற்ற பின்னர்தான் நாடாளுமன்றத்தை கலைக்கும் உத்தரவை அவர் சட்டப்படி வெளியிட முடியும்.

சரி, ஜே.வி.பியினர் கூறுவது போல அவர் தேர்தலில் வென்று முதல் வேலையாக நாடாளுமன்றத்தைக் கலைத்தால், அதுவரை அவர் பதவி வகித்த எம்.பி. பதவிக்கு அடுத்த நிலையில் இருப்பவரை நியமிக்கவும், அந்த நியமனம் வர்த்தமானியில் இடம்பெறவும் வாய்ப்பில்லாமல் போய்விடும்.

அநுரகுமார இந்தத் தேர்தலில் வென்று ஜனாதிபதியானால் அவரது இடத்துக்கு மற்றொருவர் நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்படுவதற்கு குறைந்தது 48 மணி நேரமாவது தேவைப்படும். இப்போது நாடாளுமன்றில் மூன்றே மூன்று எம்.பிக்களை வைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அநுரகுமாரவுடன் சேர்த்து நான்கு பேர் அமைச்சரவையை அமைப்பதற்கு நாடாளுமன்றக் கலைப்பை குறைந்தது இரண்டு, மூன்று நாள்களுக்காவது தாமதிக்க வேண்டியது கட்டாயமாகும். அதுதான் யதார்த்த நிலைமை. வென்றதும் நாடாளுமன்றக் கலைப்பு என்றால் உத்தேச நான்கு பேர் அமைச்சரவை கூட வெறுமனே மூவர் அமைச்சரவையாகச் சுருங்கிவிடும்.



# ‘எமது காலம்’ என்ற தொனிப் பொருளில் பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம்

(வாஸ் கூஞ்ஞ)

நமக்கு அருகாமையிலுள்ள பண்டைக்கால விடயங்களும் நாம் நாளாந்தம் அனுபவித்து வரும் பொருள்கள் தொடர்பாகவும் சாதாரண மக்களுக்கு வரலாறு தெரியாது இருந்து வருவதை அருங்காட்சி மூலம் அறிந்து கொள்ளும் நோக்குடனே ‘எமது காலம்’ என்ற தொனிப் பொருளில் பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் நடத்தப்படுகின்றது என்று மன்னார் மாவட்ட சர்வோதய இயக்குனர் திருமதி சசிரேக்கா நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

‘சேச் வோ கொமன் கிறவ்ன்ட்’ என்ற நிறுவனத்தின் உதவியுடன் மன்னார் மாவட்ட சர்வோதயத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு இடம்பெற்றது.




இதில் பழமை வாய்ந்த கண்காட்சிகளுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள முக்கியமான விடயங்களும் உள்வாங்கப்பட்டிருந்தன.

இந்த அருங்காட்சியை நடத்துவதன் நோக்கம் நமக்கு அருகாமையிலுள்ள பண்டைக்கால விடயங்களும் நாம் நாளாந்தம் அனுபவித்து வரும் பொருள்கள் தொடர்பாகவும் சாதாரண மக்களுக்குத் தெரியப்படுத்துவதே.

எமது மக்களின் கடந்த காலத்தின் வரலாற்றை நோக்கும் முகமாகவும் இலங்கையின் 70 வருட வரலாற்றை அனுபவிக்கும் ஒரு தருணமாக இந்த அருங்காட்சியகம் அமைந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் தொடக்கம் யாவரும் இதை கண்டு களிப்பது மட்டுமல்ல யாவற்றையும் நன்கு அறிந்து செல்லும் நிலையும் உருவாக்கப்பட்டது.



# கண்ணகி முதியோர் சங்கம் புனரமைப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட கண்ணகி முதியோர் சங்கத்தின் பொதுக்கூட்டம் காரைதீவில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு அந்தப் பிரிவின் கிராம உத்தியோகத்தர் எஸ்.கஜேந்திரன் முதியோர்களுக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ் .மதிசுதன் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

புதிய நிர்வாக சபைத் தெரிவு செய்யப்பட்டதோடு, சங்கத்தினர் சங்க உறுப்பின ஒருவருக்கு வைத்திய தேவைக்கான ஒரு தொகை பணமும் வழங்கி வைக்கப்பட்டது.

தலைவராக முன்னாள் இ.போ.ச. உத்தியோகத்தர் த.சிவானந்தராஜா, செயலாளராக இ.நடேசபிள்ளை, பொருளாளராக த. வசந்தாதேவி மற்றும் ஆறு பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.




# கல்முனை சாஹிரா அஞ்சலோட்ட மாணவருக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் தங்கம்

(நூருல் ஹுதா உமர்)

மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கிழக்கு மாகாண பாட சாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டி-2024 இல் கல்முனை சாஹிரா கல்லூரி மாணவர்கள் 12 வயது ஆண்கள் பிரிவில் 200 மீற்றர் அஞ்சலோட்ட நிகழ்ச்சியில் தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளனர். தேசியமட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளனர்.

இவ் வெற்றிக்காக உறுதுணையாய் இருந்த மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து ஆலோசனை, வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர் மற்றும் பிரதி, உதவி அதிபர்கள், மாணவர்களை வழிநடத்தி பயிற்சிகளை வழங்கிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம். அப்ராஜ் றிலா, விளையாட்டுப் பயிற்று விப்பாளர் எம்.யூ.ஏ. ஷம்லி, போட்டியில் பங்கேற்று தனது உச்ச திறமைகளை வெளிக்காட்டி வெற்றி பெற்ற மாணவர்கள் சகலருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

போட்டிகளில் பங்கேற்க தேவையான உதவிகளை மேற் கொண்ட பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு மற்றும் பழைய மாணவர்களுக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.



# நாட்டார் நிகழ்த்துக் கலைகளை பாதுகாப்போம்!

நிகழ்த்துக்கலை என்பது அரங்கொன்றில் கலைஞர் ஒருவர் அல்லது பலர் தமது முகம், உடல் அல்லது இருப்புக் கொண்டு நிகழ்த்துவதற்கு உரியதான கலை வடிவமாகும். இது பல்வேறு துறைகளை உள்ளடக்கியதாயினும் பார்வையாளர்கள் முன்னிலையில் நேரடியாக நிகழ்த்திக் காட்டும் கலை வடிவையே குறிக்கும். ஆரம்பக் காலத்தில் வழிபாட்டு முறைகளுடனும் சடங்கு சம்பிரதாயங்களுடனும் நாட்டார் கலைகள் செல்வாக்கு பெற்று காணப்பட்டது. பின்னர் மனிதன் நாகரீகமடைய ஆரம்பிப்பதற்கு முன்னரே கலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டான் என்பதை வரலாற்றுத் தடயங்களில் இருந்தும் ஆய்வாளர்களது ஆய்வுகளில் இருந்தும் கண்டுகொள்ளலாம்.



பழையன கழிதலும் புதியன புகுதலும் இன்றைய நவீன உலகின் மகுடமாய் இருக்க நாட்டாரியல் வழக்குக்கு என்றுமே ஒரு இடமுண்டு. அதிலும் குறிப்பாக தமிழர்கள் தமது பாரம்பரியத்தை பறைசாற்றும் வகையில் பல கலை, கலாச்சார விடயங்களைத் தம்மோடு வைத்துத் தலைமுறை தலைமுறையாகக் கலைகளை தம் பரம்பரைக்கு கையளித்தும் கலைகளுடனே கைகோர்த்தபடியும் அதனை பாதுகாக் கின்றனர்.

தமிழும் தமிழ் பண்பாடும் தலைத்தெழச் செய்வதில் தமிழர்களின் பங்கு அளப் பெரியது. அந்த வகையில் நாட்டார் கலை என்பது நாட்டுப்புற கலாச்சாரத்தின் சூழலில் உருவாக்கப்பட்ட அனைத்து வகையான காட்சிகளையும் உணர்வுகளையும் உள்ளடக்கியதாகும்.

இந்த நிகழ்த்து கலைகளின் நோக்கமாக அறக்கருத் துக்களை எடுத்துச் சொல்வதும் பயன்தரத்தக்க தகவல்களை எடுத்துக் கூறுவதும் வாழ்க்கைக்கான விழுமிய விடயங்களை விளக்குவதுமான உள்ளது.

இந்த நாட்டாரிடையே வழக்கில் வந்த பழமொழிகள், உபகதைகள், பாடல்கள், விடுகதைகள், நாடகம், கூத்து போன்றன பங்களித்தன. ஒரு மனிதன் சமூகத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் அவனது சொந்த வாழ்விலும் சமூகத்திலும் ஒரு உறுப்பினராக எவ்வகையான பணிகளை ஆற்ற வேண்டும் என்பதையும், தன் உறவுகளை எவ்வாறு பேண வேண்டும், பண்பாட்டை பழக்க வழக்கங்களை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதெல்லாவற்றையும் நாட்டார் இலக்கியங்களும் வழக்காறுகளும் அறிவுறுத் துகின்றன.

நாட்டார் வழக்காறுகள் அதிகமாக வாய்மொழி மூலம் தலைமுறை தலைமுறையாக கருதப்படுகின்றன. இது ஒரு பாரம்பரிய தன்மை வாய்ந்ததாகவும் வட்டாரத்துக்கு ஏற்ப இடத்துக்கிடம் வித்தியாசப்பட்டும் இக்கலைகள் மக்களது பண்பாட்டை பிரதிபலிப்பதாகவும் அமைகின்றன. இந்த நிகழ்த்து கலைகள் எளிமையாலும் இனிமையாலும் யாவரையும் தன்பால் ஈர்க்கும் இயல்புடையனவாகவும் காணப்படுகின்றது.



இக்கலைகள் பொதுவாக கிராமப்புறங்களில் ஒரு சமூகமாக மாறக்கூடிய மக்களை கூறலாம். இலங்கையில் காணப்படும் எல்லாப் பகுதியினரதும் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பகுதியினரும் வெவ்வேறு விதமான வாழ்க்கை முறை, உணவு முறை, பண்பாட்டு பழக்க வழக்கங்கள் போன்றவற்றைக் கொண்டும் காணப்படு கின்றனர்.

இந்நிகழ்த்துக் கலைகளின் சிறப்பம்சமாக பார்வை யாளர்கள் பங்கேற்பாளர்களாகவும் பங்கேற்பாளர்கள் பார் வையாளராகவும் மாறுவர் இக்கலைகளை மக்கள் ஆழமாக இரசித்துப் பார்த்து மகிழ்வார்கள். மனித உளவியல் கதையும் பாடல்களும் ஆட்டங்களும் கொண்டிருக்கும். இயல்பான மகிழ்ச்சியும் ஆர்வமும் அவற்றை விரும்பி கேட்கும் பொழுதுபோக்கு வெளிக்கு மக்களை கொண்டு செல்லும்.

நாட்டாரியல் நிகழ்த்துக்கலைகளின் வெளியும் காலமும் மக்களின் பங்கேற்பும் தொடர்பாடலை மக்களுக்கு நெருக்கமானதாகவும் நம்பிக்கையானதாகவும் அவற்றின் வழியே வலிமையானதாகவும் உருவாக்கிக் கொள்ள துணையாகின்றன. படைப்பாக்கம் அழகியலாக மாத்திர மில்லாத தொடர்பாடலையும் இன்னப்பிற பரிமாணங்களையும் உள்வாங்கிக் கொள்கிறது.

இந்த நாட்டார் கலைகள் மக்களுடன் ஆண்டாண்டு காலமாக மரபார்ந்த பிணைப்பை உடையவை தொடர்பாடலின் வளர்ச்சி தொடர்பில் பேசும் போது இந்த மரபார்ந்த இணைப் பைத் தவிர்த்து விட முடியாது.

மனித இனத்தின் தோற்றத்தில் இருந்து நாட்டார் கலைக ளின் தோற்றமும் ஆரம்பித்து விட்டதாக நம்பப்படுகின்றது. ஶ்ரீநரழலவ்ஜோனஸ் பாலிஷ்ரீநரழலவ் என்னும் அறிஞரின் கருத்தின் படி மனித இனம் தோன்றிய நாளையே நாட்டார் வழக்கியலின் தொடக்க நாளாக குறிப்பிடுகின்றனர்.

மக்கள் மத்தியில் இன்று பின்பற்றப்பட்டு வருகின்ற பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் அனைத்துமே எமது முன்னோர்களால் பின்பற்றப்பட்டு வந்தவையாகும். அந்த வகையில் முன்னோர்களால் பின்பற்றப்பட்டு வந்த அனைத்து பண்பாட்டுக் கூறுகளையும் நாட்டாரியல் என்ற வகைக்குள் உள்ளடக்க முடியும்.

இந்த நாட்டார் ஊடகங்களின் வழியாக தலைமுறைத் தலைமுறையாக அடுத்தடுத்த சந்ததிகளுக்குப் பாரம்பரிய அறிவும், பண்பாட்டுச் செய்திகளும் கடத்தப்பட்டு வருகின்றன. நாட்டார் ஊடகங்கள் பொது மக்களுடைய உள்ளத்துக்கு மாத்திரமல்லாது இதயத்துக்கும் மிக நெருக்கமாய் இருக்கின்றது.

இந்த வகையில் நாட்டார் ஊடகங்கள் ஏற்படுத்துகின்ற தாக்கமானது உள்ளார்ந்து வரும் தொடர்பாடலின் முக்கிய வலிமையாக காணப்படுகின்றது.

அந்த வகையில் இந்நாட்டார் கலைகள் எமது மூதாதையார் விட்டுச்சென்ற பண்பாடுகளின் பழக்கவழக்கங்களின் எச்சங்களாக மட்டுமின்றி அவற்றின் சாட்சியங்களாகவும் உள்ளன. அவை எமது எதிர்கால சந்ததியினருக்கு எமது பாரம்பரியத்தை கையளிப்பதற்கான சிறந்த ஊடகங்களாகவும் அமைகின்றன. எமது பாரம்பரியம் இவ்வாறானது என்பதை மார்தட்டி தமது சந்ததியினருக்கும் ஏனைய மக்களுக்கும் சொல்வதற்காகவும் ஒவ்வொரு தலைமுறையாக இவை கடத்தப்பட்டும் வரவேண்டும்.

**எஸ். லோயினி,**
ஊடகத் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




# கிழக்கு விளையாட்டுப் போட்டியில் சாதித்த கல்முனை அல் பஹ்றியா!

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடந்து முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் கல்முனை அல் பஹ்றியா மகா வித்தியாலயம் 5 தங்கப் பதக்கங்களையும், 5 வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுள்ளது.

3 போட்டிகளில் கிழக்கு மாகாண மட்ட புதிய சாதனை, மற்றும் ஆண்களுக்கான அஞ்சலோட்டப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு கிழக்கு மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

பாடசாலை அதிபர் எம்.ஏ.சலாம் உள்ளிட்ட கல்வி சமூகம் சாதனை படைத்த மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.




# மட்டக்களப்பு ‘93 நண்பர்கள்’ அமைப்பால் நடமாடும் மருத்துவ முகாம் முன்னெடுப்பு!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு ‘93 நண்பர்கள்’ அமைப்பால் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட நாற்பது வட்டை விபுலானந்தா வித்தியாலயத்தில் நடமாடும் மருத்துவ முகாமொன்று நடத்தப்பட்டது.

இந்த வைத்திய முகாம் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.முரளீஸ்வரனின் வழிகாட்டலுடன் மகிழடித்தீவு ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இதில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இதன்போது பல் மருத்துவம், பொது சுகாதாரப் பரிசோதனை, மாணவர்களுக்கான விழிப்பூட்டல், சத்துமா வழங்கல் போன்றன இடம்பெற்றன.






# கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் களுதாவளை பாடசாலைக்கு 12 தங்கங்கள்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் களுதாவளை மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) 12 தங்கம் உட்பட 26 பதக்கங்கள் பெற்று 6 கிழக்கு மாகாண சாதனை படைத் துள்ளது.

31 மாணவர்கள் தேசிய மட்ட போட்டிக்குத்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண மட்ட போட்டிகளின் 12 தங்கப் பதக்கங்களையும், 05 வெள்ளிப்பதக் கங்களையும்,09 வெண்கலப் பதக்கங் களுமாக மொத்தம் 26 போட்டிகளில் வெற்றிபெற்று 95 புள்ளிகளுடன் கிழக்கு மாகாணத்தில் அதிக தங்கப் பதக்கங்களையும், அதிக புள்ளிகளை பெற்றுக்கொண்ட பாடசாலையாகச் சாதித்துள்ளது.

குறிப்பாக ஆண்கள் பிரிவில் 51 புள்ளிகளையும், பெண்கள் பிரிவில் 44 புள்ளிகளையும் பெற்றுக்கொண் டது.

இம்முறை 06 புதிய மாகாண சாத னைகள் இம்மாணவர்களால் படைக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் இலக்கியக்களம்

கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் 435 ஆவது இலக்கியக்களம் விநோதன் மண்டபத்தில் இலக்கியக்குழுச் செயலாளர் தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மருத்துவர் கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன், “கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமியின் கலைச்சிந்தனைகள்” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.





# அநுரவின் ஆட்சியில் ஊழல் ஒழிக்கப்படும் என்பது போலியானதொரு வாக்குறுதியாகும்

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு



(அபு அலா )

400 பேரின் ஊழல் தொடர்பான விவரங்கள் தன்னிடம் இருக்கின்றன என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறி வருகிறார். அப்படியாயின், அந்த ஊழல் பைல்களை லஞ்சம் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் ஒப்படைத்து அது தொடர்பான முறைப்பாடுகளை இன்னும் ஏன் செய்யவில்லை என்ற கேள்வியை கேட்க விரும்புகின்றேன். தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல் ஒழிக்கப்படும் என்பது போலி வாக்குறுதியாகும்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது வலுவான ஊழல் ஒழிப்புச் சட்டங்கள் உள்ளன. அதன் மூலம் லஞ்சம் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு பலப்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே முன்னாள் அமைச்சர் உள்ளிட்ட பலருக்கு அண்மையில் நீதிமன்றத் தீர்ப்புகள் மூலம் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறு இருக்கின்றபோது, 400 பேரின் தகவல் பல தன்னிடம் இருப்பதாகக் கூறும் அநுரகுமார, அது குறித்து இன்னும் நடவடிக்கை எதுவும் எடுக்காமல், அதிகாரம் கிடைத்தபின் நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்வது ஒரு சிறுபிள்ளைத்தனமான வேடிக்கையான கதையாக உள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல் ஒழிக்கப்படும் என்று, பல தேர்தல் மேடைகளில் போலியான வாக்குறுதிகளை வழங்கும் அநுரகுமார, அதிகாரம் கிடைத்தால் கூட ஊழலுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டார் என்பதையே அவரின் போலியான தேர்தல் வார்த்தைகள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்த நாட்டில் ஊழல் ஒழிய வேண்டுமென்று, அவர் விரும்புவாராயின் தன்னிடமுள்ள ஆதரங்களில் சிலவற்றையாவது லஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் அவர் நடவடிக்கை எடுக்கத் தயாராகிறார் என்று நம்ப முடியும்.

இதனை விடுத்து மக்களை ஏமாற்றுவதற்காக வெறுமனே தேர்தல் மேடைகளில் போலியான வாக்குறுதிகளை வழங்குவதில் எந்தப் பயனுமில்லை என்பதை நான் அவருக்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.– என்றார்.



# மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்

(நடராஜா மலர்வேந்தன்)



இந்திய உதவி தூதரகக் கண்டி கிளையின் அனுசரணையுடன் பசறை கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் 306 மாணவர்களுக்கான புத்தகப் பைகள் மற்றும் அப்பியாசப் பயிற்சிப் புத்தகங்கள் உள்ளிட்ட கற்றல் வளங்கள் பகிந்தளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி சக்திமலர் மனோகரன் தலைமையில் நடைபெற்றது.

அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்திய உதவி தூதரகத்தின் உதவிக்கரம் நீட்டப்பட்ட இந்த நிகழ்வில் கண்டி, இந்திய உதவிதூதரக உதவி செயலாளர் பி.சோமராஜ், இந்திய உதவி தூதரக இணைப்பாளர் தினேஸ், பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர் ரஜனிகாந்தன், மாணவர்கள் கலந்து கொண்டனர்.





# திருமலை நாகம்பாள் ஆலய அறநெறி பாடசாலையில் புதிய மாணவர் வரவேற்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை ஸ்ரீ நாகம்பாள் ஆலய அறநெறி பாடசாலையில் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (15) இடம் பெற்றது.

நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.

அறநெறி மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதில் பெற்றார்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பு லியோ கழகத்தின 42 ஆவது பதவியேற்பு நிகழ்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு லியோ கழகத்தின 2024-2025 ஆம் ஆண்டுக்கான 42 ஆவது புதிய நிர்வாகத் தெரிவு லியோ கழகத்தின் தலைவர் ஹரிசாந்த் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (15) மட்டக்களப்பு கல்லடி தனியார் விடுதியில் இடம் பெற்றது.

2024 - 2025 ஆண்டுக்கான புதிய தலைவராக லியோ இந்திரராஜன் விதுபிரகாஷ் தெரிவு செய்யப்பட்டார். 15 லியோ கழக செயற்குழு உறுப்பினர் களும் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாக பதவியேற்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

அத்தோடு இந்த நிகழ்வில் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் விஜயகுமார், புதிய நிர்வாகத்தின் கழக ஆலோசகர் லயன் லோகேந்திரன் மற்றும் லயன்ஸ் தலைவர்கள்,லயன்ஸ் கழக உறுப்பி னர்கள், லியோ கழக தலைவர்கள், லியோ கழக உறுப்பினர்கள், முன்னாள் லியோ தலைவர்கள், புதிய லியோ அங்கத்தவர்கள் மற்றும் பெற்றோர்கள் பங்குபற்றுதலுடன் இந்தப் புதிய நிர்வாக பதவியேற்பு விழா இடம்பெற்றது.










# ஆங்கில தின போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம்!

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை கல்வி வலயத்தின் சம்மாந்துறை செந்நெல் ஸாஹிரா மகா வித்தியாலயத்தில் இருந்து ஆங்கில தின போட்டியில் கலந்து கொண்ட, ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான நாடகப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவ்வருடம் நடைபெற்ற ஆங்கில தின போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களையும், அவர்களுக்கு பயிற்சியளித்த ஆங்கிலப் பாட ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் யூ.எல்.எம். இஸ்மாயில் தலைமையில் பாடசாலையில் நடைபெற்றது.

இதன்போது சிங்களப் போட்டி, சமூக விஞ்ஞான போட்டி, தமிழ்த் தினப் போட்டி, விளையாட்டுப் போட்டி மற்றும் சித்திர போட்டிகளில் கலந்து கொண்டு மாவட்ட மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# திருமலை சமுத்திராகம கடற்கரை சிரமதானப் பணி மூலம் சுத்திகரிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை சமுத்திராகம கடற்கரை பிரதேசம் சர்வதேச கடற்கரையோர பாதுகாப்பு தினத்தை முன்னிட்டுச் சுத்தம் செய்யப்பட்டது.

மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய பல பொருள்கள் இதன்போது அகற்றப்பட்டன.


“கடற்கரையோரத்தை நாம் பாதுகாத்தால் கடற்கரையோரம் எம்மை பாதுகாக்கும்” எனும் தொனிப்பொருளில் சமூக மாற்றத்தை விரும்பும் அமைப்பு, சுற்றாடல் பாதுகாப்பு சமூக அமைப்பு என்பன திருகோணமலை திஸ்ஸ வித்தியாலய மாணவர்களின் பங்களிப்புடன் இந்த கடற்கரையோர சுத்தம் செய்யும் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர்.

கரையோரப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள், பிரதேச மீனவர்கள் உட்பட சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கடற்கரையோரத்தில் காணப்பட்ட தங்கூசி, பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் போத்தல் மற்றும் ஆபத்தை உண்டு பண்ணக் கூடிய கண்ணாடித் துண்டுகள் போன்ற உக்கி அழியாத பொருள்கள் என்பன சேகரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.





# தொழிற்பாடங்கள் மேலோங்க வேண்டும்...!

“இயக்கவியல் உலகில் மானிடத்தின் இயங்கு தன்மைக்கு, மூல அத்தியாயமாக இருப்பது தொழிற் பாடங்களின் பிரவேசமாகும்”. இன்றைய நவீன உலகில் கல்வி, ஓர் அடிப்படை விடயமாக இருந்தாலும் கல்வியின் மிக முக்கிய நோக்கம் தொழிலாகும். இதனை முன்னிலைப்படுத்தித் தொழிலை மூலக்கல்லாக நகர்த்திக்கொண்டிருக்கும் இந்த உலகில் “எமது நாடும் ஒரு விதிவிலக்கல்ல” இலங்கையில் இந்தத் தொழிற்பாடங்களின் தேவையும், தொழிற்பிரவேசமும் எமது எண்ணக்கருவில் நோக்கப்படுகின்றன.

அதற்கமைவாக, எமது பாடசாலைக் கல்வியில் அறிவுசார் விருத்தி, திறன்சார் விருத்தி, பண்புசார் விருத்தி எனும் அடிப்படையில் தொழில் பாடங்கள் ஊடாக தொழில்சார் திறன்களும் விதைக்கப்படுகின்றன.

பாடசாலை சமூகத்தின் பல்வேறு மாணவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்துவதற்கு அத்திவாரமாக அமைவது, பாடசாலை கற்றலில் இணைக்கப்பட்டிருக்கும் தொழிற்பாடங்களாகும். இதன்படி பாடசாலைக் கல்வி அமைப்பில் மாணவர்களின் தொழில் சார்ந்த திறன்களை தொழிற்பாடங்கள் ஊடாக மேம்படுத்து வதற்கு எத்தகைய முன்னெடுப்புகள் காணப்படுகின்றன என்பதை நாம் நோக்குதல் அவசியமாகும்.

மாணவர்களின் எதிர்காலத்தில் சிறந்த தொழில் வல்லுநர்களாகத் திகழ்வதற்கு அவரவர் தொழில் சார்ந்த திறமைகளை விருத்தி செய்யும் நோக்கில் வழங்கப்படும் கல்வி முறை தொழில் கல்வியாகும்.

தொழில் என்பது தற்போது பணியாற்றும் அல்லது பணியாற்ற எதிர்பார்க்கும் அனைவருக்குமான சந்தர்ப்பமாகும். இதற்கிணங்க ஒரு மாணவன் தனது எதிர்காலத்தில் தொழில் சார்ந்த நகர்வினை ஊக்கப்படுத்தி, வழிப்படுத்தி முன்னேற்றப் பாதையில் ஊடுருவிச் செல்வதற்கு தொழில் பாடங்களின் ஊடாக தொழில் சார் திறன்கள் விருத்தி கல்வியில் செய்யப்பட வேண்டும்.

தொழில் கல்விகள் பல்வேறு துறைகளின் ஊடாக வழங்கப்படுகின்றன. குறிப்பாகக் கணினி, மின்னியல், சுற்றுலாத்துறை, விவசாயத்துறை, தொழில்நுட்பம், தோட்டக்கலை, சாரதி, பொறியியல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ்வாறான தொழில் சார்ந்த திறன்கள் தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள், அரசு சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் போன்ற இடங்களில் முறைசாராக் கல்வி முறை ஊடாக, தொழிற்கல்வி வழங்கப்படுகின்றன.

எவ்வாறாக இருப்பினும் பாடசாலைக் கல்வியில் தொழிற்பாடங்களின் ஊடாக தொழிற்கல்வி எவ்வாறு விருத்தி செய்யப்படுகிறது என்பது முக்கியத்துவம் பெறுகிறது. தொழிற்பாடங்களின் ஊடாக, தொழில் சார்ந்த திறன்களை மேம்படுத்தும் மையக்கலாக விளங்குவது பாடசாலையாகும். வெறுமனே மனப்பாடம் செய்யும் கல்வி முறைக்குப் பதிலாக தொழில் ரீதியான கல்வியை வழங்குவதன் மூலம் இயக்கத்திறன் மிக்க மாணவ சமூகத்தை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

அந்த வகையில் பாடசாலையில் அறிவு சார்ந்த மற்றும் பண்பு சார்ந்த திறன் விருத்தி செயற்பாடுகளைப் போன்று தொழிற்சார் திறன் விருத்தியும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதனை தொழிற்பாடங்களின் ஊடாகவும் அதனோடு தொடர்புடைய ஏனைய செயற்பாடுகளின் ஊடாகவும் நிறைவேற்றலாம்.

இன்றைய பாடசாலை சமூகத்தில் தொழில் ரீதியான பாடங்கள் மாணவர்களுக்கு புகட்டப்படுகின்றன. இதன்படி 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட செயல்முறை தொழில் நுட்பப் பாடமாகும். இந்தக் கல்விமுறை தரம் 6 தொடக்கம் 9 வரையான மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. மற்றும் ஒன்பது தொழில் நுட்பப் பாட நெறிகள் 10 தொடக்கம் 11 ஆம் தரங்களில் அறிமுகம் செய்யப்பட்டன.

மேலும், இன்றைய தொழில்முறையில் அதிக ஆதிக்கம் செலுத்தும் ஆங்கில மொழி பிரதான பாடப் பிரிவாகக் கற்பிக்கப்படுகின்றது. அத்தோடு, தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கு பாடம் கற்பிக்கப் படல், மனையியல், தொடர்பாடல், சுகாதாரம், வாழ்க்கைத் தேர்ச்சி போன்ற பாடங்களின் ஊடாக தொழில் கல்வி புகட்டப்படுகின்றன.

உலகில் சிறந்த கல்வியை வழங்கும் முன்னணி நாடான பின்லாந்து மாணவர்களுக்கு இடைநிலை கல்வியில் மூன்று வருட தொழில்சார் திறன் விருத்தி கல்வியை வழங்குகிறது. இந்தச் செயற்பாடு பாடசாலைக் கல்வியில் தொழில் சார் திறன்களை வளர்ப்பதன் முக்கியத்துவத்தை புலப்படுத்துகிறது.

1983 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வெள்ளை அறிக்கையின் பிரதான கருப்பொருளாக விளங்கியது மாணவர் தொழில் சார் விருத்தியாகும். இதன் பிரதிபலிப்பே இலங்கை கலைத் திட்டத்தில் வாழ்க்கைத் தேர்ச்சி பாடத்தின் அறிமுகமாகும்.

இவ்வாறு தொழிற்பாடங்களின் ஊடான தொழில் கல்வி பிரவேசத்தில் தொழில்கல்வி ரீதியான ஓர் திருப்புமுனை 2017 இல் அறிமுகப்படுத்தப்பட்ட 13 வருட கால உத்தரவாதம் அளிக்கப்பட்ட கல்வி முறை யாகும்.

இந்தக் கல்வித் திட்டத்தின் கீழ் கா.பொ.த. சாதாரண தரத்தில் சித்தி பெறாத மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் தொழில்சார் திறன்களை வழங்கும் சிறப்பான திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன்படி 26 தொழில்முறைப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

தொடர்ச்சி ▼

# தொழிற்பாடங்கள் மேலோங்க வேண்டும்...!

**தொடர்ச்சி▲**

அவற்றுள் உணவு பதப்படுத்துதல், உலோக கட்டுமானக் கல்வி, மென்பொருள் அபிவிருத்தி, அலுமினியம் கட்டுமான கல்வி, மாதிரி உணவு சமைத்தல், தோட்டக் கலை, சுற்றுலாத்துறை சார்ந்த கல்வி போன்ற பாடங்களாகும்.

இவ்வாறான பாடத்திட்டங்கள் வாயிலாக மட்டுமல்லாமல் கல்விக்கும், பயிற்சிக்கும் இடையில் ஒரு இசைவிப்பை ஏற்படுத்துவதற்காக மேலும் பல செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

குறிப்பாகத் தொழில்சார் கண்காட்சிகள் இடம்பெறுதல் (2023 ஆம் ஆண்டு மேல், தென் மாகாணங்களில் இடம்பெற்றது. வட மாகாண கைத்தொழில் துறை அப்பகுதி உற்பத்திகளை மையப்படுத்தி நடத்திய கண்காட்சி). இதன் மூலம் மாணவர்களுக்கு, தங்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாகவும், புதிய விடயங்களை உள்வாங்கிக் கொள்வதற்கான வாய்ப்பாகவும் உள்ளது.

புகைப்படக்கலையில் திறமை கொண்ட மாணவர்களுக்கு தொலைக்காட்சி அலைவரிசை போட்டி நடத்தி ஒளிபரப்பாகியது. போட்டி, பரிசோதனை முறைகள், சம்பவப் பகுப்பாய்வு முறை, தொழில் சந்தை, செய்வழி ஆய்வுகள், தொழில் திறன் கருத்தரங்குகள் போவற்றின் ஊடாகப் பயிற்சியுடன் கூடியதான தொழிற்கல்விகள் வழங்கப்படுகின்றன.

பாடசாலை கலைத்திட்டத்தில் தொழிற்பாடங்களின் ஊடாக வழங்கப்படும் தொழில் கல்வியின் மூலம் ஓர் இயங்கு தன்மை கொண்ட மாணவச் சமூகத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். அதாவது, பல்வேறுபட்ட தொழிற்பாடங்கள் மாணவர்களுக்கு தெரிவாகக் காணப்படும்போது, குறித்த தொழிற்பாடங்களின் ஊடாக தங்களது சக்தியை உச்ச நிலையில் பிரயோகித்து தொழில்சார் திறன்களை வளர்ப்பதோடு எதிர்காலத்தில் அவர்களின் பொருளாதாரத்திலும் தடங்கலற்ற விருத்தியை ஏற்படுத்த முடியும்.

மேலும், நிலை பேறான உந்து சக்தியாக திகழக்கூடியதும், பயனளிக்கக் கூடியதுமான ஜீவனோபாயத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இன்று அபிவிருத்தியடைந்து வரும் காலகட்டத்தில் "மனித சமூகத்தின் தேவையும் ஓட்டமும் தேங்கி நிற்கும் நிலையில் இல்லை" எனவே, உயிர்த்துடிப்பு மிக்கதும் இயக்கத்திறன் கொண்டதுமான மாணவச் சமூகத்தை மிளிர வைப்பதற்கு தொழிற்பாடுகளின் பிரவேசம் இன்றியமையாததாகும். இத்தகையக் கல்வி முறையினை மாணவச் சமூகத்துக்கு வழங்குவதில் பல சவால்களும் காணப்படுகின்றன. அந்த வகையில் இலங்கை கலைத்திட்டத்தில் தொழிற்பாடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவற்றின் பிரயோகத்தன்மை குறைவாகக் காணப்படடல். மேலும், தொழிற்பாடங்களில் பயிற்றுவிக்கப்பட்ட திறமை வாய்ந்த ஆசிரியர்கள் காணப்படாமை, பின்தங்கிய கிராமப்புற பாடசாலைகளில் காணப்படும் வளப்பற்றாக்குறை, செயற்பாடுகளின் தொடர்ச்சி இன்மை போன்ற இன்னும் அநேக காரணங்களினால் மாணவர்களுக்கு தொழிற்கல்வி வழங்க முடியாமல் அவர்கள் எதிர்காலம் கேள்விக்குறியாக நிற்கின்றது.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்போது வினைத்திறனான முறையில் தொழில் கல்வியை வழங்க முடியும். அந்த வகையில் பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களை தொழிற் பாடங்கள் ரீதியாக பயிற்றுவிப்பதற்கான வளவாளர்களை அழைத்து கருத்தரங்குகளையும் பயிற்சிகளையும் வழங்குதல், மாணவர்களுக்கு தொழிற்கல்வியின் தாற்பரியத்தை அறியச் செய்தல், பழைய மாணவர்களிடமிருந்து நிதி உதவிகளை பெற்றுக்கொள்ளல், ஆய்வு கூடங்களை பாடசாலையில் நிறுவுதல் போன்ற முன்னெடுப்புக்களின் ஊடாக மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

ஆகவே, இலங்கை பாடசாலை கல்வி கட்டமைப்பில் மாணவச் சமூகத்துக்கு தொழிற்பாடங்களின் ஊடாக தொழில்கல்வி வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பல நிறைகளும், சில குறைகளும் காணப்பட்ட போதிலும் இவை எல்லாவற்றையும் தாண்டி தொழிற்கல்வியை புகட்டும்போது திறன்களின் உச்சநிலையில் நின்று பிரகாசிக்கும் மாணவச் சமூகத்தின் ஊடாக அபிவிருத்தியடைந்த வளமான நாட்டுக்கு வழிவகுக்கும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**அரிச்சந்திரன் டிசாலினி,**
கல்வியியல் சிறப்பு கற்கை,
இரண்டாம் வருடம்,
கல்வி பிள்ளை நலத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

# வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கப்பல் திருவிழா நாளை நடக்கும்!

வரலாற்று சிறப்பு மிக்க வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலய வரலாற்றை எடுத்துக் கூறும் சிறப்புத் திருவிழாவான கப்பல் திருவிழா நாளை (18) புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அந்நியரான வெள்ளையர்கள் நாகர் கோவில் கிராமத்துக்குள் புகுந்து அங்குள்ள மக்களை அடிமைகளாக்கும் நோக்குடன் கப்பலில் அவர்களை ஏற்றி நாடு கடத்த முயற்சித்த போது மக்கள் அவலக் குரல் எழுப்ப அவர்களை ஏற்றிய கப்பலை நகர விடாது நாகேஸ்வரப் பெருமான் காப்பாற்றிய வரலாற்றை விளக்கும் வகையில் இந்தச் சிறப்புத் திருவிழா நடைபெறுவது வழக்கமாகும்.

நாளை புதன்கிழமை பகல் திருவிழா முடிவுற்றதும் மாலை வசந்த மண்டப பூசை இடம்பெற்று இரவு முழுவதும் மேளக் கச்சேரி இடம்பெற்று நள்ளிரவுக்கு பின்னர் மீண்டும் வசந்தமண்டப பூஜை இடம்பெற்று சுவாமி வீதி உலா வரும் வேளையில் அன்றைய வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் கலைஞர்கள் நடித்துக் காண்பிப்பார்கள்.

கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமான இவ்வாலயத்தின் அலங்கார உற்சவத்தின் சிறப்புத் திருவிழாவான கப்பல் திருவிழா இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பட்டுத் தீர்த்தத் திருவிழாவுடன் அலங்கார உற்சவம் நிறைவடையும்.

# எஸ்.யு-30 போர் விமானங்களை மேம்படுத்த இந்தியாவின் உதவியை நாடும் அர்மீனியா



எஸ்.யு-30 ரக போர் விமானங்களை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் உதவியை அர்மீனியா நாடியுள்ளது. இதற்காக இந்தியாவிடம் இருந்து கருவிகள் வாங்க முற்பதிவு செய்யப்பட்டுள்ளது.

எஸ்.யு. ரக போர் விமானங்களை ரஷ்யா தயாரித்து பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது. இந்த எஸ்.யு. ரக போர் விமானங்கள் இந்தியா, அர்மீனியா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் வாங்கி தங்களது விமானப் படையில் இணைத்துள்ளன.

இந்நிலையில் இந்த வகை விமானங்களை பயன்படுத்தும் அர்மீனியா, தற்போது இந்தியாவின் உதவியை நாடியுள்ளது. எஸ்.யு.-30 ரக போர் விமானத்தில் இணைப்பதற்காக ரொக்கெட் சிஸ்டம், ஆர்டிலரி கன், ஆயுதங்களை கண்டறியும் ரேடார்கள்போன்றவற்றை இந்தியாவிடமிருந்து பெறுவதற்கான முற்கொடுப்பனவு அர்மீனியா கொடுத்துள்ளது.

சோவியத் யூனியன் பிரிந்த பின்னர் அர்மீனியா, அஜர்பைஜான் நாட்டுடன் 2 முறை போரில் ஈடுபட்டது. தற்போது தனது இராணுவத்தின் பலத்தை பெருக்கிக் கொள்ள முடிவு செய்துள்ளது.

எஸ்.யு-30 எஸ்.எம். ரக போர் விமானங்களில் இந்த கருவிகளை பொருத்துவதற்காக தற்போது ஓர்டர் கொடுத்துள்ளது அர்மீனியா. இந்த கருவிகளை இந்தியா தயாரித்து தனது எஸ்.யு-ரக போர் விமானங்களில் பயன்படுத்துகிறது.

மேலும் ஏவியானிக்ஸ், எலக்ட்ரானிக் போர்க் கவச உடைகள், ஆயுதங்களையும் இந்தியாவிடம் அர்மீனியா கோரி வருகிறது. இதுகுறித்து அர்மீனியா விமானப் படையின் கர்னல் ஹோவ்ஹான்ஸ் வர்தன்யா கூறும் போது,

"இந்தியாவில் உள்ள எச்.ஏ.எல். நிறுவனத்திடம் போர் விமானங்களில் பயன்படுத்தக் கூடிய ஆயுதங்களை கேட்டுள்ளோம். இதன்மூலம் எங்களிடம் இருக்கும் எஸ்.யு.-30 ரக போர் விமானங்களை நவீனமயமாக்க முடியும். எங்களின் ராணுவ பலமும் பெருகும்" என்றார்.

ரஷ்யாவிடம் அனுமதி பெற்று எஸ்.யு. ரக போர் விமானங்களை தனது நாசிக் தொழிற்சாலையில் இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனம் (எச்.ஏ.எல்) தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு - காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தல்:

# உள்ளூர் கட்சிகள், சுயேச்சைக்கு குறிவைத்து களமிறங்கும் பா.ஜ.க.



ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்துக்கு எதிர்வரும் 18, 25, ஒக்டோபர் முதலாம் திகதிகளில் 3 கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ளது.

முதல் கட்ட வாக்குப்பதிவுக்கான தேர்தல் நாள் நெருங்கியுள்ளதால் பா.ஜ.க, காங்கிரஸ், ஜம்மு-காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி, மக்கள் ஜன நாயகக் கட்சி (பி.டி.பி) உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரில் முதன்முறையாக தனித்து ஆட்சியமைக்க பா.ஜ.க. முயன்று வருகிறது.

இதற்குமுன்னதாக 2014 இல் பி.டி.பி. கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை பா.ஜ.க. அமைத்திருந்தது. 90 தொகுதிகள் கொண்ட ஜம்மு-காஷ்மீர் பேரவையில் தனித்து ஆட்சியமைக்க 46 இடங்களில் வெற்றி பெறவேண்டும். இந்தத் தேர்தலில் உள்ளூர் கட்சிகள் 7, 32 சுயேச்சைகளும் களத்தில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில், பா.ஜ.க. வட்டாரங்கள் கூறும்போது,

"ஜம்மு-காஷ்மீரில் ஆட்சியமைக்க உள்ளூர் கட்சி சார்பில் வெற்றி பெறும் வேட்பாளர்களின் ஆதரவும், சுயேச்சைகளின் ஆதரவும் கண்டிப்பாக தேவை. எனவே, பா.ஜ.க. மேலிடம் அவர்களை வளைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து வெற்றி வாய்ப்புள்ள சுயேச்சைகள், உள்ளூர் கட்சிகளின் ஆதரவை பா.ஜ.க. மேலிடம் கேட்டுப் பெறும் என்று தெரியவந்துள்ளது.மேலும், தேர்தலுக்கு முன்பாகவே அவர்களுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வர பா.ஜ.க. மேலிடம் முடிவு செய்துள்ளது" என்று தெரிவித்தன.

# நரேந்திர மோடிக்கு மு.க. ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து



பிரதமர் நரேந்திர மோடியின் 74 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் பகிர்ந்துள்ள வாழ்த்து செய்தியில்,

"பிரதமர் மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள். நீண்ட ஆயுளுடனும், ஆரோக்கியத்துடனும் இருக்க வாழ்த்துகிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு அவருக்கு பல்வேறு மாநில முதல்வர்கள், அரசியல் கட்சி தலைவர்கள், சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.



# யாகி சூறாவளி தாக்கம்; இதுவரை 220 பேர் பலி





யாகி சூறாவளி காரணமாக மியன்மாரில் இதுவரை 220 பேர்வரை உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் 80 பேர்வரை தேடப்பட்டு வருகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

வியட்நாம், லாவோஸ், தாய்லாந்து மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளில் சூறாவளியின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

தற்போது குறித்த பகுதியில் உள்ள மக்கள் உணவு, தண்ணீர் மற்றும் வசிப்பிடமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



# சீனாவில் பெபின்கா புயல் 100 விமானங்கள் இரத்து!





சீனாவில் உருவான பெபின்கா புயல் காரணமாகப் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ததால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஷாங்காய் நகரிலிருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டனர்.

புயல் காரணமாக சுமார் 100 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

புயல் கரையைக் கடக்கும்வரை மேலும் 500 விமானங்கள் இரத்து செய்யப்பட உள்ளதாக சீன விமான போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

கனடா முரசு
பக்கங்கள் 06
செவ்வாய்க்கிழமை 17/09/2024

## ஈரானிய அதிகாரிகள் மீதான தடையை நீடித்தது கனடா!

கனடிய அரசாங்கத்தினால் ஈரானியா அதிகாரிகள் மீது விதிக்கப்பட்ட தடை மேலும் நீடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் சிரேஷ்ட 02



# நாடாளுமன்றின் அமர்வு நேற்றுத் தொடங்கியது

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை நகர்த்திவதில் எதிரணி முனைப்பு

**கனடாவில் இலையுதிர் கால நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று ஒட்டாவாவில் ஆரம்பமாகின.**

**கோடை விடுமுறையை தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையான சபையின் அமர்வுகளில் கலந்து கொள்கின்றனர்.**

**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கன்சர்வேட்டிவ் தலைவர் பியர் பொய்யியெவ்விடமிருந்து தொடர்ச்சியான தேர்தல் அழுத்தத்தை எதிர்கொள்ளும் நிலையில் நாடளுமன்ற அமர்வுகள் மீண்டும் ஆரம்பிக்கின்றன.**

இந்த அமர்வில் தனக்கு கிடைக்கும் முதலாவது சந்தர்ப்பதில் லிபரல் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாக்கெடுப்புக்கு விடவுள்ளார் என பியர் பொய்யியெவ் தெடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

லிபரல் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கை வாக்கெடுப்பில் உதவ ஏனைய எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அவர் அழைப்பு விடுத்து வருகிறார் .

அரசாங்கத்துடன் செய்து கொண்ட நம்பிக்கை ஒப்பந்தத்தில் இருந்து புதிய ஜனநாயகக் கட்சி அண்மையில் விலகிய நிலையில் இந்த அமர்வு முக்கியத்துவம் பெறுகிறது.

சிறுபான்மை லிபரல் அரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு, புதிய ஜனநாயகக் கட்சி, புளொக் கியூபெக்குவா கட்சிகளின் ஆதரவு கன்சர்வேட்டிவ் கட்சிக்கு தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பது குறித்த எந்த உறுதிப்பாட்டையும் ஜக்மீத் சிங் வெளியிடவில்லை.

நம்பிக்கை வாக்கெடுப்பின் போது லிபரல் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது குறித்து சாதகமான கருத்துக்களை அண்மையில் புளொக் கியூபெக்குவா வெளியிட்டு வருகிறது.

லிபரல் அரசாங்கத்தை ஆதரிப்பதற்கு ஈடாக கியூபெக் மாகாணத்திற்கு தேவையான ஆதாயங்களைப் பெற தயாராக உள்ளதாக புளொக் கியூபெக்குவா கூறியுள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சி 119 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளது.

ஜஸ்டின் ட்ரூடோவின் 154 நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரசாங்கத்தை பதவி விலத்துவதற்கு அவர்களுக்கு 24 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு நம்பிக்கை வாக்கெடுப்பில் தேவையாகிறது.

புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவு குறித்து கேள்வி எழுந்துள்ள நிலையில், 32 நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் புளொக் கியூபெக்குவா அதிகார சமநிலையை கொண்டுள்ளது.



# கனடாவில் திடீர் மரணங்களை தவிர்க்க செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்

வைத்தியசாலைகளில் இடம்பெறக் கூடிய திடீர் மரணங்களை தவிர்ப்பதற்காக புதிய செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கனடிய ஆய்வாளர்களினால் இந்தப் புதிய கண்டு பிடிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் ஊடாக இந்த ஆய்வு முயற்சி வெளியிடப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் எதிர்பாராத விதமாக இடம்பெறக்கூடிய மரணங்களை தவிர்க்கும் நோக்கில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

நோயாளிகளுக்கு மரணம் ஏற்படக் கூடிய நிலைமைகள் தொடர்பில் முன்கூட்டியே எதிர்வு கூறக்கூடிய செயற்கை நுண்ணறிவு பொறிமுறை ஒன்று வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

கனடிய மருத்துவ ஒன்றியத்தினால் இது தொடர்பான தகவல் அந்த நிறுவனத்தின் சஞ்சிகையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

ஆபத்தான நோயாளர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்கு இந்த புதிய முறை பயன்படும் என ரொறன்ரோ மருத்துவப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் மருத்துவத்துறையில் பல்வேறு விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நோயாளர்களை தொடர்ந்து கண்காணிக்க கூடிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஊடாக நோயாளிகளின் நிலைமை பாதிக்கப்படுவதை கண்டறிந்து மருத்துவர்களுக்கு அறிவிக்கும் முறைமையாக இந்த புதிய முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.




## ஈரானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் மீது கனடிய அரசாங்கம் தடை விதித் திருந்தது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி ஈரானிய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் மீது இவ்வாறு தடை விதிக்கப்பட்டிருந்தது.

குறித்த இரண்டு அதிகாரிகள் கனடாவிற்குள் பிரவேசிக்க தடை விதிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரனிய அரசாங்கம் பல்வேறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள் ளதாக குற்றம் சுமத்தப்பட்டடுள்ளது.

ஈரானியப் புரட்சி பாதுகாப்புப் படையை தீவிரவாத இயக்கமாக கடந்த ஜூன் மாதம் கனடா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# இடைத் தேர்தல் முடிவுகளின்படி லிபரல்களுக்குப் பின்னடைவு!

மொன்றியல், வின்னிபெக் தொகுதிகளில் இடைத் தேர்தல் வாக்களிப்பு நேற்று நடைபெற்றது.

இந்த இரண்டு தொகுதிகளிலும் உள்ள கனடியர்கள் தமது அடுத்த நாடாளுமன்ற உறுப்பினரை தேர்வு செய்கின்றனர்.

இதில் வின்னிபெக்கின் எல்ம்வூட்-டிரான்ஸ்கொனா தொகுதியை புதிய ஜனநாயகக் கட்சி பிரதிநிதித்துப்படுத்தி வந்தது. அந்தக் கட்சியே இந்தத் தேர்தலிலும் அங்கு சுமார் 1,158 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றது.

பிரதான வேட்பாளர்களில் புதிய ஜனநாயகக் கட்சியின் லெய்லா டான்ஸ் அம்மையார் 13,606 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் கொலின் ரெனோல்ட்ஸ் 12,448 வாக்குகளையும், லிபரல் வேட்பாளர் இயன் மக்கெண்டியர் 1,306 வாக்குகளையும் பெற்றனர்.

இடைத் தேர்தல் நடைபெற்ற மற்றொரு தொகுதியான மொன்றியல் லசால்-எமார்ட்-வெர்டுன் தொகுதியை லிபரல் கட்சி இதுவரை பிரதிநிதித்து வப்படுத்தி வந்தது.

மொன்றியல் தொகுதியில் லிபரல், புளொக் கியூபெக்குவா கட்சிகளுக்கு இடையே போட்டி பலமாக இருப்பதாக கருத்துக் கணிப்புகள் தெரிவித்திருந்தன.

அங்கு கியூபெக்குவா கட்சி கடும் போட்டிக்கு மத்தியில் வெறும் 148 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கியூபெக்குவா கட்சியின் வேட்பாளர் லூயிஸ் பிலிப்பி சவ் 8,884 வாக்குகள் பெற்றார். லிபரல் கட்சியின் வேட்பாளர் பலஸ்தினி 8,636 வாக்குகள், புதிய ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் கிரெய்க் சவ் 8,262 வாக்குகள், கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் லூயிஸ் லலண்டி 3,676 வாக்குகள் பெற்றனர்.

இந்தத் தொகுதியில் தேர்தல் சீர்திருத்தத்தை வலியுறுத்தி, இப்போதைய தேர்தல் முறைமைகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து 85 மேற்பட்ட சுயேச்சைகளும் ஒன்றாகக் களமிறங்கியிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் இரட்டை இலக்க வாக்குகளைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.






# 70 மில்லியன் டொலர் பரிசு லொத்தரில் வென்ற தம்பதி

கனடாவின் ஒன்றாரியோவைச் சேர்ந்த தம்பதியினர், லொத்தர் சீட்டிலுப்பில் 70 மில்லியன் டொலர்களை பரிசாக வென்றெடுத்துள்ளனர்.

லொட்டோ மெக்ஸ் ஜாக்பொட் லொத்தர் சீட்டிலுப்பில் இவ்வாறு பணப்பரிசு வென்றெடுக்கப்பட்டுள்ளது.

அவர்கள் முதல் தடவையாக கனடாவில் கொள்வனவு செய்த லொத்தர் சீட்டுக்கு இவ்வாறு பணப்பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது.

கயில் முரே மற்றும் ஜெனிபர் ஸ்டுவர்ட் பிளைன் ஆகிய தம்பதியினரே இவ்வாறு பாரிய தொகை பணப்பரிசு வென்றெடுத்துள்ளனர்.

ஜெனிபர் அண்மையில் தங்களது குழந்தையை பிரசவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

விமான நிலையத்தில் காத்திருந்த கணவருக்கு லொட்டோ மெக்ஸ் ஜாக்பொட் லொத்தர் சீட்டை கொள்வனவு செய்யுமாறு ஜெனிபர் குறுஞ் செய்தி மூலம் கோரியுள்ளார்.

மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்க கயில் இவ்வாறு லொத்தர் சீட்டை கொள்வனவு செய்துள்ளார்.



# மக்கள் வீடுகளை வாங்குவதற்கான வசதியை விரிவுபடுத்துகிறது அரசு

## நிதி அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தஜவல்

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது லிபரல் அரசாங்கத்தை பாதிக்கும் ஒரு முக்கியமான அரசியல் பிரச்சினையான - வீட்டு வசதிகளை மக்கள் மிகவும் மலிவு விலையில் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக சில அடமான விதிகளில் மாற்றங்கள் - கனடாவின் நிதி அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் நேற்று அறிவித்தார்.

ஃபிரீலேண்ட், அரசாங்கம் காப்பீடு செய்யப்பட்ட அடமானங்களின் வரம்பை 1 மில்லியன் கனடிய டொலர்களிலிருந்து 1.5 மில்லியன் கனடிய டொலர்களாக உயர்த்தி வருவதாகக் கூறியது.

இது ஏற்கனவே ஐந்து சதவிகிதம் தேவைப்படும் குறைந்தபட்ச முன்பணத்துடன் அதிகமான மக்கள் வீட்டை வாங்க அனுமதிக்கும் எனக் கூறப்படுகின்றது.

முன்னதாக, வீட்டின் விலையில் ஐந்தில் ஒரு பகுதியையாவது முன்பணமாக செலுத்தாத கனடியர்கள் அடமானக் காப்பீட்டை எடுக்க வேண்டும்.

ஆனால் காப்பீடு 1 மில்லியன் கனடிய டொலர்கள் அல்லது அதற்கும் குறைவான விலையுள்ள வீடுகளுக்கு மட்டுமே கிடைத்தது. அந்த வரம்பு இப்போது 1.5 மில்லியன் கனடிய டொலர்களாகும்.




# வின்னிபெக்கில் மர்மமான முறையில் தீயில் கருகி இரண்டு பேர் உயிரிழப்பு

கனடாவின் வடக்கு வின்னிபெக் பகுதியில் மர்மான முறையில் தீயில் கருகி இரண்டு பெர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தீ விபத்து ஓர் படுகொலைச் சம்பவமாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் சிக்கிய மூன்று பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனவும் அதில் இருவர் உயிரிழந்து விட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

49 வயதான கேடா வாடிஸ்கோ மற்றும் 38 வயதான ஸெனாபு குலா ஆகிய இருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சனிக்கிழமை அதிகாலை 2:49 மணி அளவில் தீ விபத்துச் சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டதாகவும் தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ மூட்டல் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரையில் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ரஷ்ய எல்லைக்குள் ஊடுருவி உக்ரைன் தாக்குதல் நடத்த அனுமதிக்க வேண்டும்

## கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கருத்து



ரஷ்ய எல்லைக்குள் உக்ரைன் தாக்குதல் நடத்த அனுமதிக்க வேண்டும் என கனடியப் பிரதமர் தெரிவித்தார்.

நேட்டோவின் நீண்ட தூர ஆயுதங்களை பயன்படுத்தி ரஷ்யாவை தாக்குவதை கனடா முழுமையாக ஆதரிக்கிறது எனப் பிரதமர் தெரிவித்தார்.

மருத்துவமனைகள், குழந்தை பராமரிப்பு மையங்கள் மீது ரஷ்யா மேற்கொள்ளும் தாக்குதல்களைத் தடுக்க நேட்டோ வழங்கிய ஆயுதங்களை உக்ரைன் பயன்படுத்திக்கொள்ள முடியும் எனவும் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார். உக்ரேனிய குடிமக்களின் உள்கட்டமைப்பைச் சீரழிக்கும் ரஷ்யாவின் தொடர்ச்சியான தாக்குதலை தடுக்கவும் இது அவசியமானது என அவர் கூறினார்.

ஆனால் நேட்டோவின் நீண்ட தூர ஆயுதங்களை உக்ரைன் பயன்படுத்துவது கனடாவையும் அதன் நட்பு நாடுகளையும் தம்முடன் நேரடிப் போருக்கு இழுக்கும் என ரஷ்யா அச்சுறுத்துகிறது.

இந்த நிலையில் உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டுவருவது அல்லது தொடர்வது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புட்டினின் முடிவு என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.

ரஷ்யாவின் படையெடுப்பிற்கு எதிராக போராடுவதில் உக்ரைன் வெற்றி பெற வேண்டும் என்பதில் கனடா உறுதியாக உள்ளது என ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.



# பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது ஏரியில் மூழ்கி இந்தியா மாணவர் மரணம்

கனடாவின் டொரண்டோ நகரிலுள்ள ஏரியில் அண்ணின் பிறந்த நாளை கொண்டாடச் சென்ற நபர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தெலுங்கானாவின் ரங்காரெட்டி மாவட்டத்தின் மீர்பேட்டை பகுதியை சேர்ந்தவர் பிரணீத். 2019 ஆம் ஆண்டு முதல் கனடா நாட்டில் தங்கி படித்து வந்த இவர், சமீபத்தில் முதுநிலை பட்டப்படிப்பை முடித்திருக்கிறார்.

கனடாவில் வேலை தேடியும் வந்திருக்கிறார். 2022 ஆம் ஆண்டில் இவருடைய அண்ணன் கனடாவுக்கு சென்றிருக்கிறார். இந்நிலையில், கடந்த சனிக்கிழமை, பிரணீத்தின் அண்ணனின் பிறந்த நாளை கொண்டாடும் நோக்கில், இந்த இரு சகோதரர்களும் அவர்களுடைய நண்பர்களுடன் டொரண்டோ நகரில் உள்ள ஏரி ஒன்றிற்கு சென்றுள்ளனர்.

அவர்கள் அனைவரும் ஏரியில் குதித்து நீந்தி மகிழ்ந்தனர். இதன் பின்னர் அவர்கள் கரையேறினர். ஆனால், பிரணீத் ஏரியில் இருந்து வெளியே வரவில்லை. இதுபற்றி தகவல் அறிந்து வந்த மீட்பு குழுவினர் ஏரியில் தேடினர்.

இதில், நீரில் மூழ்கி உயிரிழந்த பிரணீத்தின் உடலை மீட்டனர். இந்த சம்பவம் பற்றி அவருடைய குடும்பத்தினரிடம் நேற்று தகவல் தெரிவிக்கப்பட்டது. அவருடைய உடலை இந்தியாவுக்கு திரும்பி கொண்டு வர உதவிடும்படி, மத்திய, மாநில அரசுகளை பிரணீத்தின் தந்தை கேட்டு கொண்டுள்ளார்.




# பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் ரொறன்ரோவில் இளைஞன் மரணம்

கனடாவின் ரொறன்ரோ பொலிஸாருடன் ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் 21 வயது இளைஞர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யோர்க் பிராந்திய பொலிஸார் அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது இந்நபர் பொலிஸாருடன் சண்டையிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது அவர் படுகாயமடைந்துள்ளார்.அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

என்ன காரணத்தினால் அந்நபர் உயிரிழந்தார் என்பது பற்றிய விவரங்கள்எதுவும்வெளியிடப்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் ஒன்றாரியோ விசேட விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் இந்த விசாரணைகள் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.